THE HINDU-27-MAR-2018

ஈஷா சார்பில் விளையாட்டுப் போட்டி

கோவை

கோவை ஈஷா யோகா மையத்தின் ஈஷா அவுட்ரீச் அமைப்பு மற்றும் சோழமண்டலம் குழுமம் சார்பில் பெண்களுக்கான த்ரோ பால் போட்டி மாதம்பட்டியில் நடைபெற்றது.

இதில், சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட கிராமப்புற மற்றும் ஆதிவாசி பெண்கள் பங்கேற்றனர். இறுதிப் போட்டியில் தேவராயபுரம் அணியும், சீங்கபதி அணியும் மோதின, இதில், தேவராயபுரம் அணி 2-0 என்ற புள்ளிக் கணக்கில் சீங்கபதி அணியை வென்று, கோப்பையை கைப்பற்றியது. இரண்டாம் இடத்தை சீங்கபதி அணியும், 3-வது இடத்தை நல்லூர்வயல்அணியும், 4-வது இடத்தை சாடிவயல் பதி அணியும் வென்றன. சிறந்த வீராங்கனைக்கான விருது சீங்கபதி அணியைச் சேர்ந்த பானுப்ரியாவுக்கு வழங்கப்பட்டது.